மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவெண்ணெய்க்கலம்பகம்.

திருவெண்ணெய் நல்லூர் பஞ்சலட்சண சரபம்

இராஜப்பநாவலரவர்களால்

இயற்றப்பட்டு,

இந்நூலாசிரியரின் பிரதம மாணாக்கரான

தி. ந. சுப்பிரமணிய முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டதை

ஷையாரின் மாணாக்கரும்

திருவெண்ணெய் நல்லூர் கம்பர் கலாமிர்த சங்க

அங்கத்தினருளொருவருமான

தி. வடிவேலுமுதலியாரவர்களால்,

கிச்சினர் அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1911.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சாற்றுக்கவிகள்.

இந்நூலாசிரியரின் பிரதமமாணாக்கரான

## தி. ந. சுப்பிரமணிய முதலியாரவர்களால்

இயற்றப்பட்டது.

### பன்னிருசீர் கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட பூம்பொழில் செறிந்தவளை தவழ்பண்ணை
 செந்நெல்கள் னற்பொலிந்த
செல்வதிரு வெண்ணெய்மா நகரிற் சிறந் திலகு
 திருவருட் டுறைதளிக்கண்
ஏர்கொண்ட பக்தர்க ளிடத்து மித்தேகொண்
 டிலங்குமங் களவல்லிதன்
னிடமாக மேவுகிரு பாபுரீ சர்ச்சரோ
 ருகமல ரிணைத்தாளுழிப்
பேர்கொண்ட நவரச வலங்கார மாகவொரு
 போருபதி னெட்டுறுப்பும்
பிறங்குறு கலம்பக மலங்கலை யணிந்துமேற்
 பேரின்ப கதிவேட்டுறும்
நார்கொண்ட வத்தலத் துறைவர்கவி வாணர்க
 ணயந்தநாற் கவிசிரேட்ட
நம்பனடி மறவாத நற்றமிழ்க் கடலிரா
 சப்பநா வலரத்தினமே.

### கலித்துறை,

புண்ணியர்மீது வன்றொண்டர் பிரான்றமிழ் பூத்ததற்கு
பண்ணிய வூதிய மேபெறவேட்டுப் பனுவலறுந்
திண்ணிய செந்தமிழ் தேமாலைசாத்தி யத்தீர்த்தனடி
நண்ணிய வெண்ணெய் நகர்வாழிராசப்ப நாவலனே.

# சாற்றுக்கவிகள்.

திருவெண்ணெய் நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ. தி. ந. சுப்பிரமணிய முதலியா ரவர்களின்

மாணாக்கரிலொருவரான

தி. ரா. நரசிம்ம பாகவதரவர்களா லியற்றிய

பஃறொடை கோச்சகக்கலிப்பா.

---

பனிரெண்டடியால் வந்தது

நீர்சூழு முவருடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீர்சூழும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதின்
தக்கவள நடுநாட்டின் தகைமைசொளு மருதநிழல்
தெக்கிணபெண் ணருவியிடைத் தெரிகிலைகோ புரமதிளார்
அந்தனன்றாட் டேதுகொண்ட வருட்டுறையாம் வெண்ணெய்நல்லூர்
பித்தனுறை யகலிடத்தைப் பெற்றபிரா னற்றவமே
பல்லுயிரும் பலவுலகும் பயிலுமொழித் தமிழ்வேதச்
சொல்லுணர்ந்து யிறைவனுக்கே சொற்றனனிக் கலம்பகமே
நாவலூர் புராணமுன னவின்றபெருங் கவிவாணன்
சேவலான் றிருவடியைச் சிந்திக்கு நெஞ்சுடையான்
செங்குந்தக் குலம்விளங்கச் செய்தவனே திருவருளா
லெங்குந்தன் புகழிலங்கு மிராசப்ப நாவலனே.

---

அறுசீராசிரியப்பா.

பூமகிழப் பொலிந்திலங்கும் புகழினிய தமிழ்வேதம்
போற்றும் யாண்டும்
நாமகிழத் தந்தருள்வா னிராசப்ப நாவலன்செய்
நக்கன் சீர்சால்
சேமமுடைத் திருவெண்ணெய்க் கலம்பகத்தாற் றெளிந்துய்யச்
செவ்வை யாகப்
பாமருவும் நாவுடையான் வடிவேல னச்சிட்டுப்
பதிப்பித் தானே.

---

ஸ்ரீலஸ்ரீ தி. ந. சுப்பிரமணிய முதலியாரவர்களின் மாணாக்கரும்
கம்பர் கலாமிர்த சங்க அங்கத்தினரு ளொருவருமான
தி. வடிவேலு முதலியாராலியற்றப்பட்டது.

---

அறுசீர் விருத்தம்

திருமாதுறு வெண்ணெய் வளம் பதியே
திகழ்மாம்தாரு பாக மமைத்தபிரா
னொருகான்மண மாலை தவிர்த்திடுவா
னுளமேமகிழ் வெய்த கலம்பகமாய்
தருநாவல ராஜ னெனும்பெயரே
தருமேதினி மீதணி மாதிடவா
னுரைவாசக மோதிய போதகர்தா
முறுவார் கணன் மேலுறு போகமதே.

---

திருவெண்ணெய் நல்லூர்.
போர்டு எலிமெண்டரி பாடசாலை உதவி உபாத்தியாயர்
தி. அ. பொன்னரங்கம் பிள்ளை அவர்களால்
இயற்றப்பட்டது.

---

பன்னிருசீர் கழிநெடிலாசிரிய விருத்தம்.

---

தூயகயி லாயத்து நிருமித்த படிநாவ லூரன்னகரில் வந்துதித்த
சுந்தரர்தனைத்தடுத் தாட்கொண்ட வெண்ணெய்த் தலங்கருட்டுறையில்வாச
நேயமுறு மங்களாம் பிகையிடப் பாகத்து நேசன் கிருபாபுரீசன்
நீதமா மலரடியின் மீதிற்றொழும்புபுரி நெடியவந் நகர்மேலோங்கும்
மேயசெங் குந்தமர பிற்றிலக மாய்வந்த வித்துவசிரோ மணியணி
விண்ணவ ருருந்தமிர்த மென்னநவ ரசவணி விளங்கிய தமிழ்ப்பூமலர்
ஆயது தொடுத்துக் கலம்பகப் பிரபந்த மையனுக் கணிமாலையின்
அரும்பொருளிலக்கியவிலக்கணக் கவிப்பிராசப்பநாவலர்களரசே.

---

## சாற்றுக்கவிகள்.

திருவெண்ணெய்நல்லூர்

தி. ல. சடாக்ஷரவேலு முதலியார் கொடுத்த

# சாற்றுக்கவி.

---

பன்னிருசீர் கழி நெடிலாசிரிய விருத்தம்.

---

சீர்மேவு திருமுனைப் பாடிநன் னாட்டிற்
சிறந்ததென் பெண்ணை தென்பால்
செல்வந் திரண்டதிரு வெண்ணெயம் பதியருட்
டிகழுங் கிருபாபுரீசர்
கார்மேவு கற்பகக் காவின்மலர் மாலைகக
ணப்புலவர் வாரி சொரியும்
கமலவிரு பதமலரி நிகரில்சுந் தரர்சொலும்
கவிமாலை சூடி நின்ற
தார்மேவு மவ்வந்தி வண்ணர்மேற் பாமாலை
தான்பாட வேநினைந்து
தவமிகச் செய்துசெந் தமிழிலக் கணவிலக்
கியசலதி துருவியமுதம்
நார்மேவு வெண்ணெய்க் கலம்பக மெனப்பெயர்
நவின்றுதிரு வடிசாத்திய
ஞானசெங் குந்தமர பிற்றிலக மானகவி
ராசப்ப நாவலோனே.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவெண்ணெய்க் கலம்பகம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

திருவெண்ணெய் நல்லூர்ச் சிவபெருமான் சீர்த்தி
மருவுங் கலம்பகப்பா மாலை—யுரைசெயவே
நல்லாவி நாயகனை நால்வா யொருமுக்கட்
பொல்லாவி நாயகனைப் போற்று.

## நால்வர் துதி.

கட்டளைக் கலித்துறை.

தென்னவன் கூனிமிர்த்தோன் கற்புணைகொடு சிந்துவந்த
மன்னவன் றாது விழிவாட்பாவை மணக்களைத்து
முன்னவன் செல்லப் பணித்தோன் றிருமுறை யாஞ்சுருதி
சொன்னவன் பாதங்க ளெஞ்ஞான்றுஞ் சென்னியிற் சூடுதுமே.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இஃதெட்டடித்தரவு. க.

பொன்பூத்த பங்கயக்கட் புங்கவனும் பங்கயனும்
மின்பூத்த வச்சிரக்கை வேந்தனுந்தா டொழுதேத்தக்
கந்திருவ ரிசைபாடக் கடவுளர்பூ மழைபொழிய
அந்தரதுந் துமிமுழங்க வரம்பையர்க ணடம்புரிய
முனிவரர கரவென்ன மூதுணர்ந்தோர் சிவசிவென
அனவரத மெதிர்நின்றுங் கருணந்தி விடைகொடுப்பக்
கரும்பமுத மொழிவிழிவேற் காதலுமை யிடமிலங்க
விரும்புலகுக் கருள்புரிவான் வெண்ணெய்நல்லூ ரினிதமர்ந்தோய்.

இவை ஈரடித்தாழிசைகள். ௬.

ஆதிநடு வந்தமிலா வத்தனே நின்கமல
பாதமுற வேதமுடி பண்டுதவஞ் செய்தனவோ

எப்பொருளா முன்னுகினு மப்பொருளாய் வந்தருளு
மெய்ப்பொருளே நிற்குறித்து விரும்பிலரு முளரோவால் உ.
சங்கையறு தத்துவங்க டமைக்கடந்த தற்பரநீ
யைங்கடவு ளாயயர்த்தி லைந்தொழிலு மியலாவே. ங.
சராசரங்க ணீயொருகாற் றழல்படுத்துந் திருநீறு
பராபரநின் னவயவற்றுட் பாலமிடற் காற்றுவால் ௪.
கண்டகவன் னெஞ்சர்க்குக் காண்பரிதா யன்புமிகுந்
தொண்டருள முன்னுமுனந் தோன்றுவநின் னியலாமே ரு.
பணியரையன் பணியாகிப் பயின்றுமுன்றன் செயலறியா
தெணியினுநெட் டுயிர்க்குமெனி னேழையேன் சொலற்பாற்றோ சு.

இவை ஈரடி அராக்கங்கள். ௪.

சனகனை முதலிய தவமுனி வரருடை
மனவிரு ளிரி தர மறைமுடி வருளினை க.
அலைகட னிலமுத லசைவுற முனிவொடு
மலையென வருபெரு மதகரி யுரியினை உ.
அரிமுத லமரரு ணடிமலர் கதியென
விரிகட லிடையெழு விடநுகர் மிடறினை ங.
தறுகண சுரனணி தசமணி மகுடமு
நெறுநெறு வெனநிறு வியவடி விரலினை ௪.

இவை பெயர்த்தும் ஈரடித் தாழிசைகள். ௪.

பூருவமா முயிர்களைமெய்ப் புகுத்துதொறு மயக்கியநீ
தாருகா வனமடவார் தமைமயக்கல் வியப்பன்றே க.
சரபவுரு வெடுத்துடல்கூர் தமனியனு ருயிர்கவர்ந்த
நரமடங்கன் மருடவிர்த்த நாயகநின் புகழாமே உ.
கிரிவரிவிற் பணிகயிறு கிளரரி யத்திரமிருந்துந்
திரிபுரங்க ளெரித்ததுநின் சிறுநகையி னியல்பன்றோ ங.
இருமூன்று சமயருமெம் மிறைவனென வாதாட
மருவிறைநீ காளியொடு வாதாடி நின்றனையே ௪.

இவை நாற்சீர் ஓரடி அம்போதரங்கம். உ.

அருவமு முருவமு மறமும் பாவமும்
பெருமையுஞ் சிறுமையும் பிறழ்ந்து நின்றனை க.

பண்ணுறு வேதமும் பயனுமா யம்
தெண்ணுறு மறிவுமா யியைந்து நின்றனே. ௨

இவை முச்சீர் ஓரடி அம்போ தரங்கம். ௪.

செயமத னெரிய விழித்த னே
சிறுவிதி மகம தழித்த னே
முயலகன் முதுகு தெழித்தனே
முளரியனொருக மொழித்தனே

இவை இருசீர் ஓரடி அம்போதரங்கம். ௮.

மற னுழைத்த னே
அற னிதத்த னே
மதி பரித்த னே
நதி தரித்த னே
மறி யுகந்த னே
பொறி யிகந்தனே
மரு டுறந்த னே
அருள் சிறந்தனே.

**எனவாங்கு இது தனிச்சொல்.**

இஃது பதினறடி நேரிசையாசிரிய சுரிதகம்.

நாவலா ரூரனன்மண மியற்றுங்
காவணத் திடையிற் காண்குனர் வியப்ப
அந்தணர் வடிவ மாயவ ணெய்திச்
சுந்தர னெனது தொண்டனென் றுரைந்துப்
பொய்ம்முறி காட்டிப் பூசுர ரவைக்கண்
மெய்ம்மையின் வென்று விழைமணந் தவிர்த்து
மருட்டுறை புகாது வலியவாட் கொண்ட
அருட்டுறை நாத வமல வேதாந்த
சித்தி யானந்த நிறைபரம் பொருளே
பத்தியிற் பணிவார் பவப்பிணி மருந்தே
தன்னே ரில்லாச் சதாசிவ மூர்த்தி
நின்மாட் டொன்றே நிகழ்த்துவன் மறுக்கே
லெச்சன னங்கள் யாண்டியாண் டெடுப்பினும்
இச்சிவ சமயத் தெய்திய தொண்டர்

2

அவைபி னுளு மன்புற
நவைதீ ரறிவு நல்கு தி யெனக்கே. க

### நேரிசை வெண்பா.

கேழ்கிளர்தா ளேத்துநரைக் கேடிலுவ கைக்குள்
வாழ்விக்கும் வெண்ணெய் வளம்பதியான்—சூழ்தடக்கண்
ஆரமணி யத்தரிக்கு மார்கலிநஞ் சுண்டசிவன்
ஆரமணி யத்த னருள். உ

### கட்டளைக்கலித்துறை.

அருளாழி வெண்ணெய்நல் லூரண்ண லாறங்க வாரணத்தின்
பொருளாழி யச்சு தற்கீந்த முன்னோன் முனம் புங்கவர்க்கா
யிருளாழி நஞ்சுண்ட வெம்பெருமான் கழ லேத்தி வையத்
தருளாழி போன்று வருசனனங் கடந் துய்ம்மின்களே. ங

### அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மின்னனைய மடந்தையரை விரும்பியுள்ள காலமெலாம் வீணிற் போக்கி
கொன்னுதிவே லியமனெதிர் குழையவுறை வாண்மனமே கூறக் கேண்மோ
பொன்னவிர் சடாமௌலி வெண்ணெய்நல்லூ ருறைகிருபா புரி மயேசன்
தன்னிருதாள் விரும்புதியக் காலனிற்கண் டுளங்குழைதல் சரத மாமால். ச

### எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சரதங் கருதிய பயனன் கடைகுவர் சமையந் தொறுமுறை தனிநாதன்
வரதன் மலைமக ணகிலம் புனைபுய வரையன் கருணைசெய் மணிகண்டன்
இரதங்கரிபரி நிறைவெண்ணெயினுறை யிறைவன் சுரர்தொழ வெழின்மன்றுள்
பரசம் புரிமணி திகழுங் கழலணி பதமன் பொடுபணி பவர்மாதோ. ரு

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பவளந் திகழ்செஞ் சடையன் விடையன் பகவன் றிரியம் பகனைம் முகவன்
திவளங் குழையன் காமன் னுழையன் றிருவெண்ணெயான் பதமுன் னுதிபந்
தவளந் தனமைங் குழல்கந் தரநந் தனமென் னடையம் பலர்கண் ணிடைவஞ்
சிவளந் தருமென் றொடையென் றறையந் திறமென்னருளுந் தெளிவன் மனமே.

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மனங்கனிய வருள்புரியும் வெண்ணெய்நக ரண்ணல் கிரிமடந்தை பாகன்
முனங்கழைவின் மதனையெரித் தவனிருவர் கணவனென மொழிசிலாய் சந்
தனங்கலவை யெனமுலையிற் றழற்குழம்பப் பியசகியான் சகிக் கொணாத
அனங்கனிக லவற்குரைத்தி டென்னினின்பே றெனக்குரைத்தாயருளன்பாமே

### இதுவுமது.

அன்பொடக மிகவுருகி யரியதவம் புரிந்திறைவற் கடிமையாதல்
என்றியம்புஞ் சுருதிமொழி யென்பரா ரூரன்மண மியற்றுங் காலை
வன்புவழக் குரைத்தடிமை கொண்டதிரு வெண்ணெய்நல்லூர் மங்கை பாகன்
றன்கருணை யின்பெருமை யாரணமுஞ் சொலற்பாற்றோ சகத்து ளோரே. அ

### கலிவண்ணத்துறை.

சகமுறு சனனமு தவுமிரு வினையலை தனின்மூழ்கி
இகபர முணரறி விலிநின தடியெண லெதுநாளோ
நிகரறு முனிவர ரரகர வெனுமொலி நிறைவெண்ணெய்
நகரினு மருமறை முடிமிசை யினுநணு கியதேவே. ௯

### பதினான்கு சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தேவர்யா மெனச்சிறந்த தேவருந் தொழப்பெறுந்
தேவநின்னை யன்றிவேறு தேவர்கண்டி லேமரைப்
பூவயன் சிரங்கரம் பொலிந்ததுன் சரண்க ணோர்
புண்டரீக நாபன்கண் பொலிந்ததாத லிற்செழுங்
காவணிந்த வெண்ணெயம் பதிக்கருத்த னேவிடங்
கண்டமட்டு முண்டநீல கண்டதொண்ட ரெண்பொருள்
ஆவனுற் றளிக்குமெங்க ளத்தனே வினைக்கட
லாழ்த்திடா தருட்கடற்கு ளாழ்த்தினுய்வ னளியனே. ௰

### [புயவகுப்பு - ஆசிரியவண்ண விருத்தம்.]

இது முதலடி.

அளிகளுழ வெழுநறவ மளவுபரி மளவிதழி
யணியலொடு மணிவலய மிலகச் சுமந்தன
அரியவினை யிருளகல வுசிதசிவ கதியினுற
வருளுமிய லணிநிலவு திருநீ றணிந்தன
அடிமலரி னிதயமல ரிடுமடியர் கருதுபொரு
ளதுதருவ லெனமிகவு மருளோ டழைப்பன
அரிபிரம னமரரிட ருறுபொழுது விமலநின
தடியிணைக டுணையெனுமு னபயங் கொடுப்பன.

இது இரண்டாமடி.

தளிரனைய வடிவவுமை யிடைமெலிய வளருமிரு
தாளவட முலவுமுலை பொருதக் குழைந்தன
தடமுமதி லெரியமுனி வொடுககன முகடுதொடு
தமனிய நெடுங்குவடை சிலையா வளைத்தன

## திருவெண்ணெய்க்கலம்பகம்.

சலசமல ரிடையினுறை விதிசுருதி மொழியுமொரு
தலையைவிர னுதியுகிரிற் பற்றிச் சிதைத்தன
தனயனெனு மினியசர வணபவனை யிதயமகிழ்
தழையவரு கெனமடியி னிடையே யிருத்தின.

இது மூன்றாமடி.

நளினவித ழொருநயன மடியினிடு மரியினுள
நனிமகிழ வொளிதிகிரி தனைமுற் கொடுத்தன
நலநயமி லடவியிரு டிகளுடைய மகமெழுசி
னமுமதமு மிகுபெரிய விபமா வுரித்தன
நயனமணி பொடியணியு மறிஞாக முருகவெழி
னடனமிடு பொழுதினபி நயமுற் றிருந்தன.
நனியழகு பெறுபெயரி னனையடிமை யெனமறையி
னசைகொளவ ரவையினிடை முறிகொண் டளித்தன

இது நான்காமடி.

ஒளியுமிழு மணிமவுலி யணியுமிமை யவரிறைவ
னுதவியவி சயனொடெதிர் மற்போர் புரிந்தன
உணரவரு மறைமுடிவி தெனவுசித மதுரமிக
வொழுகவடி யவருரைசெய் பதிகம் புனைந்தன
உததியொலி யிஃதெனவு முழுநரொலி யிஃதெனவு
முணரவறு பழனமுறு வெண்ணெய்த் தலத்திடை
உருவமுட னருவமுரு வருவமெனு மகிமையுறு
மொருபரம சிவனதிரு கொற்றப் புயங்களே. ௰௧

### நேரிசை வெண்பா.

புயல்வண்ண னெண்கண்ணன் போற்றுவெண் ணெயூர்
சயல்வண்ணக் கட்கௌரி காந்த—செயல்வண்ணம்
ஆராயு மத்தகுதி யல்லேற்கு நின்னையன்றி
யாராயு மத்தனு மானார். ௰௨

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஆர்கொண்ட சடைமுடியன் வெண்பொடிய னுதற்கண்ண னந்தி வண்ணன்
ஏர்கொண்ட வுமையிடத்தன் றிருவெண்ணெய் நகரிடத்த னிணைத்தாளேத்திச்
சீர்கொண்ட கண்மணியுந் திருநீறும் புனைவதுவே செல்வ மன்றி
நீர்கொண்ட புவியரசும் விண்ணரசுஞ் செல்வமென நிகழ்த்த லென்னே. ௰௨

### கலிவிருத்தம்.

என்னனை யிருந்துமென தெண்ணமுணர் கில்லாள்
உன்னனைய தோழிய ரொருத்தரிலை நீயே
மின்னனைய வேணியனை வெண்ணெய்நகர் மேவும
மன்னனை வணங்கிமலர் மாலைகொ டளிப்பாய். ௰௪

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பாயிர மறைகள் போற்றும் பரனடி பணிவோர்க் கன்பன்
சேயிதழ்க் கமலவாவித் திருவெண்ணெ யிறைவ னன்றித்
தாயிலைத் தந்தை யில்லைத் தாட்டுணை யன்றி யேத்த
வாயிலை யெனநெஞ் சில்லை வணங்கமெய் யில்லை மாதோ. ௰௫

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மாதவஞ்செயுங் கோதிலார்தொழுமங்கைபாகனுர்க்கங்கைமோகனுர்
வேதனும்ப ரெப்போதுமே துதி வெண்ணெயம் பதி நண்ணுமாபதி
பாதமீது மென் போது சூடுவார் பத்தியா யுளம் வைத்து நாடுவார்
பேதமின்றி நின் றோது வாரவர் பெத்த ராயினு முத்த ராவரே. ௰௬

### கட்டளைக் கலித்துறை.

ஆவா கனன்றிரு வெண்ணெய் நல்லூருறை யண்ணலிறை
பூவார் கழலிணை போற்றி மதன்சிலை பூட்டி யம்பாங்
கோவா தெய்கின்றன னீவா ரலையெனி னோர் மடந்தை
ஆவா வென்செய்வளென் றுள்ளன்புறவுரை யாயிழையே. ௰௭

### கலிவிருத்தம்.

ஆய்ந்தபைம் பூணினு யண்ட ராதியர்
வேய்ந்தபூம் பாதனுர் வெண்ணெய் நாதனுர்
வாய்ந்தன ரிதழ்க்குறி வைத்து ளன்பொடு
தோய்ந்தன ரச்சுகஞ் சொல்லற் பாலதோ. ௰௮

### அறுசீர்க்கழி நெடிலாசிய விருத்தம்

பால்வண்ணப் பொடியணிந்த பவளவண்ணத் திருவுருவப் பரம நாத
சேல்வண்ணக் கொடிமதனை யெரித்தருளும் வெண்ணெய் நல்லூர்த்தேவதேவ
நூல்வண்ண விடையுமையா ளிடமிலங்க வுரம்புரிநா னுடங்க வெள்ளை
மால்வண்ண விடையுகந்து தமியேன் மு னமன்வருமுன் வருகு வாயே. ௰௯

### இதுவுமது.

வருவனென நிமித்திக னுமுரைத்தனன்பல் லியுஞ்சொலிற்று வரத்திலே யுன்
புருவமொடு விழியுமிடந் துடிப்புறல்பார் புனமயிலே புலம்பேலின்று
சருடமிற்ற னுமையிடத்தன் றிருவெண்ணெய் நகரிடத்தன் கருத்தன் யாதும்
பொருவிலத்தன் றிருநடத்தன் புனிதனித்த னினதுமுலைப் புணருவானால். ௨௰

### கலிவண்ணத்துறை.

புணர்கொங்கை யுடைநங்கையிடையன்பு முதிர்கின்ற புலைநெஞ்சனு
மணமன்னு மடியுன்னு மறிவொன்றி மகிழ்வெய்த வருமோசுரர்[ன்
கணமுன்னு திருவெண்ணெய் நகரின்க ணுறைசம்பு கருணாலய
பணவல்கு லுமைபங்க நதிகொன்றை யணிதுங்க பரமேசனே. ௨௧

### அம்மானை - மடக்குக்கலித்தாழிசை.

பரிவொடுடைமை யாளவெண்ணெய்ப் பதியமர்ந்த பசுபதிக்கு
வரிசிலையத் திரநாணி மாணாக மம்மானை
வரிசிலையத் திரநாணி மாணாக மாமாயின்
திரிபுரங்க ளனைத்தெரித்த செயலென்னோ வம்மானை
நக்கனது கண்டா னகையாலோ வம்மானை. ௨௨

### மடக்குக்கோச்சகக் கலிப்பா.

மானுகந்த திருக்கரனார் வழிகருணைத் திருக்கரனார்
தேனிழியுங் கடுக்கையார் திரைக்கடலின் கடுக்கையார்
பாநகத்த வளம்பதியார் மருவுவெண்ணெய் வளம்பதியார்
கூனமதிச் சடையாரே குறியார்நெஞ் சடையாரே. ௨௩

### நேரிசை வெண்பா.

ஆரணமு மாரணனு மச்சுதனு மெச்சுமிரு
சீரணிந்த பாதா திருவெண்ணெ—யூரிறைவா
சங்கமழுந் தாதலர்பூந் தாரோ யடியேனாழ்ப்
பங்கமழுந் தாதருட்கண் பார். ௨௪

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பாடுமா வளிகளே கூடுவாழ் கிளிகளே
பம்புபூஞ் சோலையே செம்பொனேர் மாலையே
நீடுகட் செவியெனுந் தோடுடைச் செவியனார்
நீறுசேர் மெய்யனார் வீறுமான் கையனார்
ஏடுலாஞ் சடையனார் கோடுமால் விடையனா
ரெண்ணருங் கதிதரும் வெண்ணெயம்பதியனார்
வாடுமெல் லிடையிறக் கூடுமென் முலையிடை
வாதினான் மருவினா ரீதறிந் திருமினே. ௨௫

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இருமையினு மொருபலனை யெய்தவருள் வெண்ணெய்நக ரிறைவ னெம்மான்
ஒருமகிட முகந்தலையி யுதைத்தருளும் பரமசிவ னுமையோர் பங்கன்
றிருவடியை வணங்கினரும் வணங்காரு நந்தலுறுந் திறத்தி னேனொன்
றருமறைசொ லுதவுலக மறியுமவை யருகர்புத்த ரறியா ரியாதோ. ௨௬

### கட்டளைக் கலித்துறை.

யாதென் றுரைசெய்கென் றோகாய் திருவெண்ணெயீசன் மென்கைப்
போதென்றுந் தந்தமுத்தென்றும் வண்கொங்கைப் புளகநல்குஞ்
சூதென்று மென்சொற் சுகமென்று மேனிச் சுரர்குலத்தோர்
மாதென்றுஞ் சொல்லி மணந்தார் மறந்ததென் வஞ்சகமே. ௨௭

### மேகவிடுதூது-எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சகமேழும் விளங்கு தகஞ்சொரியுந் தயையார்முகில் காடொழுகின் றனைன்மா
நகமே சிலையாக வணக்கினனை நவநீத புரத்துறை நாயகனைக்
ககவாகன னோடு பதாம்புயனை கழனூழ்ந்துமையா ளறியாதெனுளத்
தகநீடுமவத்தை யெலாஞ் சொலிவா கணிமாலை தரக்கொடளித்திடுமின். ௨௮

### கொச்சகக் கலிப்பா.

மின்போ லுதித்து மறை மெய்யினை மெய் யென் றெண்ணும்
என்போ லறிவிலியு மிந் நிரைநா தன் கமல
மன்போற்று வெண்ணெய்நகர் மாதேவ நின்போலும்
அன்போடிவந் தெனையா ளாண்டவனுங் கண்டிலனே. ௨௯

### எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

கண்டுகண் களிநீர் பெருக நெஞ்சுருகிக் கரங்குவித் திணையடிதொழுது
தொண்டுசெய் தடியே னுய்யுமா றுளவோ சுந்தரற்கருளிய சோதி
கொண்டல்கண்படுக்கு மாட மாளிகையுங் கொடிநிரைத் திலகு நீண்மதிலும்
விண்டலமளக்குங் கோபுரங்களுஞ் சூழ் வெண்ணெயம் பதியுறை சிவனே. ௩௰

### கலிச்சந்த விருத்தம்.

சிவசங்கரா கருணாகரா திரிலோசனா பவமோசனா
நவசங்கமூர் வயல்வெண்ணெயூர் நடனம்புரி கிருபாபுரி
அவசந் தருந் துடிமென்மருங் கடர்வன்முகிழ் நகிலம் புகழ்
பவனென் றெனையிகழா துனைப்பரவும் வரந் தரலின்பரம். ௩௧

### இரங்கல் கட்டளைக்கலிப்பா.

பரவு தொண்டன்விவாகந்தவிர்த்தவன் பலியெடுத்தவன்பாம்பென்பணிந்தவன்
அரிவையர்க்கிடந் தந்தவனீமதின்ருடிஞனெவெண்ணெ யத்த னென்றேதியும்
இரவும் வெம்பகலுங் கிருபாபுரி யென்றிரங்குகின் முண்மக டையலாய்
சரதமாயவர்க்கோ திப்புணர்ப்பவர் தாமிலேனென்செய் கேன்றமியேனரோ.

### அறுசீரக்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தமிழ்வேதமெனும் பதிகஞ்சாத்தியவா ரூரன் மணந் தடுத்தாட் கொண்டும்
அமிழ்தான மொழிப்பரவை மனைக்கிரவிற் றூது சென்றுய மார்க்காக
இமிழ்வாரி விடநுகர்ந்தா யெளியேனைக் காப்பதுனக்கி பேயல்வண்டுண் [வே.
டிமிழ் தேனுண் மலர்ப்பொழில் சூழ்வெண்ணெய் நகரினி தமர்ந்த வுலகவாழ்

### கலிவிருத்தம்.

வாழ்வாய்மனமே வருமாத்திரையின்
போழ்தாயினுமன் புறமும் மலமும்
போழ்மாநவநீத புரேச்சுரனைச்
சூழ்வாய் பிறவித்துயர் சிந்திடவே. நடச

### ந்வம் கலித்துறை.

சிந்தகுடைந்துஞ் செந்தழனின்றுந் திகழாயுள்
அந்தமுமென் காய்கந்தநுகர்ந்து மயர்வீர்காள்
மந்திரவேதந் தந்தருளெந்தை மகதேவன்
பந்தமிகந்தோன் வெண்ணெயடைந்து பணிவீரே. நடரு

### கலிவிருத்தம் கோமூத்திரி.

வீறுமாசிவ தேவனை வெண்பொடி
நீறுபூசிய தேகனை விண்பொரு
நாறுகாநவ நீதபுரேசனை
கூறுமாநச நீவிடுநேசமே. நடசா

### சித்து அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

நேசமிகு மடியவருக் கருள்புரியும் வெண்ணெய் நகர் நிமலன் செவ்வான்
றேசுடையன் வங்கமலை வெள்ளிமலையாய்ச் சமைத்த சித்தரேம்யாம்
வாசவன்றனிருப்புலகம் பொன்னுலகமாக்கு வித்தோமருந்திலாமற்
காசகன்ற நாகமுயர் மாதங்கமாக்குவங் கூழ்கண்டிலோமே. நஎ

2293 (8476)

# திருவெண்ணெய்க்கலம்பகம். கள

நேரிசைவெண்பா.

கண்மணியும் விண்மணியுங் கைப்பொருளைக் காட்டுதல்போல்
ஒண்பொருளை நால்வர்க் குரைத்தவரன்—வெண்ணெய்
வளம்பதியா னம்பகவன் மாதேவ னென்றோர்
உளம்பதியா னம் பகமே யோர்ந்து. ருஅ

கட்டளைக் கலித்துறை.

துதியுடையான் றிருவெண்ணெய்ப் புரேசன் றுகிர்ச்சடை
மதியுடையான் கர மானுடையானிட மாமயில்போற்
சதியுடையான் புணரும்போ துளத்துஞ் சதியுடையான்
திதியுடையான் கொடி யன்பிரியாச்செய றேர்ந்திலனே. ருக

நேரிசை ஆசிரியப்பா,

இல்லற வியற்கைத் தொல்லுல கறிய
விளங்கொடி யொருபால் விளங்க வீற்றிருந்துந்
துறவற மிஃதென் றறவர் நன்குணர
வேகமாய் நின்று மநேக சீவரினுங்
கலந்துங் கலவா திலங்கு செஞ்சுடரே
விண்வளி தீநீர் மண்ணுமொளான் றிரண்டு
மூன்று நான் கைந்தாய்த் தோன்றிய பரமே
யாவரு மெமது தேவனென் றுள்ளத்
தமைவுற மூவிரு சமையமும் வகுத்தாங்
கவையிடை விளங்கு நவையறு வரமீந்
தருள்புரி யிறைவ திருமலச் சொருப
வைந்தொழி லியற்று மந்திரப் பொருளே
இருவினைக் கடலுக் கொருபெரும் புணையே
வாக்கொடு மனமூந் தாக் கருஞ் சிவமே
நீறணி பவருள் ளூறிய வமுதே
யப்பனே யாவு மொப்பிலா மணியே.
வேண்டற் குரிய மாண்டவப் பேறே
யவனவ ளதுவென் றுவமையின் முதலே
முதலிடை யிறுதி கிதமறைப் பொருளே
யையனே கருணை பெய்யுமா முகிலே
விரும்பிய வளிக்கும் பெருங் கற்பகமே.
மூவா விமலா தேவா சிபனே
காண்டற் கரிய தூண்டா விளக்கே

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

புண்ணிய பலன் செய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெயம் பதியி னண்ணிய பிரானே
காம மார்ச்சரிய மாமத மோகங்
குரோத முலோபம் விரோத மிடம்பம்
நடுநிலை யின்மைக் கொடுமையா தியவாம்
பொல்லா வியற்கை யெல்லாம் பொதிந்த
வுருவெடுத் துன்றன் றிருவடி மறந்த்
நாயினுங் கடையனைத் தாயினு மன்பா
யற்புத நல்குநி ற்புகழ் பாடப்
பணித்த நின்கருணை யெனிற் கரையின்று
லிவ்வண மினுமுன் செவ்வணம் புகழ்ந்தாங்
கீறிலாப் பருவ மாறிமாறி வருங்
கண்ணிமைப் போலு மெண்ணரும் பிறவி
யெடுத்தீண்டுழல்வது விடுத்து மாறாத
நவிலரு மின்பச் சிவ கதிச் செல்வ
மெளிதிற் பெற வுன்னுளங் கூர்ந்
தருள் புரிவதும் பெரிது நின்கடனே. ௩௰

---

**கட்டளைக்கலித்துறை.**

கடனஞ் சருந்தி மழுவேந்தி வானவர் கண்களிக்க
நடனஞ் சவையிடஞ் செய்தாண் டருள் வெண்ணெய் நாயகற்குக்
கடனஞ் சலென்றளித் தன்மனமே மிக்க காதலித்தோர்
இடனஞ் சலிபுரிங் தைந் தெழுத் துன்னி யிருந்திடினே. ௩௧

**மடக்கு - அறுசீர்க்கழி நெடில் ஆசிரியவிருத்தம்.**

இருக்குழையன் றிருக்குழையன் கண்ணுதற்கோ வெண்ணுதற்கோ வினியன் மன்றுள்.
திருத்தனிறை யொருத்தனிறை நீதனவ பேதனவ நீதக் காவில்
முருக்கிதழுந் திருக்கிதழு நகமுலையுஞ் சுகமுலையு மொழியுஞ் சிந்தை
உருக்கிடையுங் கருக்கிடையு நகையுமுடைத் தகையுமுடைத்தொருகொம்பிற்கே

**எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.**

ஒருகா லிரதன் வெயிலான் மணிகா லொளி வெண் மதிநேர் முகமா மயிலே
இருகா றனரே வினிவா னவர் போற் றிறைவன் கெளரிக் கிடநல் கியவோர்
கிருபா புரிநா யகனு ருறையுங் கிளர்கோ புரமுங் கொடிமா மதிலும்
திருவா லயமுங் குலமா ளிகையுந் திகழ்வெண் ணெய்நலூ ரொரு காவதமே. ௩௨

### கைக்கிளை - மருட்பா.

காவி விழியிமைக்குங் காத்திரமோ வேர்வரும்பும்
பூவடிமண் டோயு மணப் பூவாடுங் - தேவ
கணந்தொழு வெண்ணெய்க் கடவுளிதழி
மணங்கமழ்வே ணிவரையில்
அணங்கல வீண்டுறை யணி திகழணங்கே. ௪௪

### அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

சேழ்கிளர் தாமரை போலு மிறைஞ்சு மகேசனை வெண்ணெய் நகர்
வாழ்கிரு பாபுரி நாதனை வேண்டு வரந் தரு வள்ளலை நீ
தாழ்கிலை மூவர் சொ லாய்கிலை யன்பு தழைந்திலை நெக்குருகிச்
சூழ்கிலை நீர் விழி சோர்கிலை தேடிலை துணையினி யார் மனமே. ௪௫

### சம்பிரதம்-பன்னிரு சீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

மேதினி யெலா மொரு விரற்றலை நிறுத்துவன்
விண்ணையிமை யான் மறைப்பன்
விரிகடற் புனலெலா மங்கையிற் கொள்ளுவன்
வெங்கதிரை நளிர் செய்குவன்
மாதிரக் கயமெட்டும் வீறிடப் பிளிறுவேன்
மலையையணு வினி லடைப்பன்
மாநதி நுண் மணலெலா மெண்ணியள விடுவன்
மதிக்கரிய வித்தைதனிலே யோ
ஆதிநடு வந்தமில் லாவிறைவ னறிவினுக்
கறிவான பரமசிவனார்
அணியிஞ்சி சூழ்வெண்ணெய் நல்லூ ரருட்டுறையு
ளத்தனச் சுதன் முளரியோன்
நீதில் விண்ணவராதி யாவரையு மாட்கொண்டு
திருவருள் புரிந் தளித்த
திகழ்பூதி யக்கமணி யில்லாத கடவுளைத்
தேடுமன்றொன் றருமையே. ௪௬

### கட்டளைக் கலித்துறை.

அருமருந் தன்ன வொரு பெண்ணுனைக் கண்ட வன்று முதல்
தருமருந் தியாவையுந் தந்தாந் தெளிந்திலள் சார்ந்திடுத
மருமருந் தாரமுதும் வெறுப்பாயின மற்றவணீ
வருமருந் தல்ல தினிவேறிலை வெண்ணெய் வாழ்பரனே. ௪௭

### நேரிசை வெண்பா.

பரமன் றிருவெண்ணெய்ப் பண்ணவனால் வேதப்
பிரமன் சிரமறுத்த பெம்மான்—மருமலர்விற்
பூட்டியஞ் செய் தான் மெய்ப் பொடி படுத்தான் மன்று ளெழில்
நாட்டியஞ் செய் தான் பதமே நம்பு. ௪௮

### கட்டளைக்கலிப்பா - இடைச்சியார்.

நம்பனும்பர் பிரான் கழ லார்கழ னம்பினோர்க் கரு ளுங் கிரு பாபுரி
வம்புலாம்பொழில் வெண்ணெய் நல்லூரரன் வரையினிற் றயிரோ ஒ. தயிரெனு
மம்பொனே யிடை யின்றி யிடைச்சி நீ யான தன்மையு மார்பிடைத் தாங்கிய
கொம்மை நேரிரு பாற் குடத் தின்விலை கூறிலாதுநுங் கூறின் வியப்பதே. ௪௯

### அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

வியனுறு நல் லற மறியா ரிற்புகுந் தாங் கயனோக்கி வேலைநோக்கி
நயனுறு நன் மொழி யுரைப்ப நிற்பாடி யுந் தருமோ நாயினேற்குக்
சயனமன் னுமைக்கமுதே கருணைப்பூத் திடு தருவே கமலபீடத்
தயனெடிய மால்பரவும் வெண்ணெய் நல்லூ ரருட்டுறை வாழாதிதேவே.

### மடக்கு - கட்டளை மண்டலக் கலிப்பா.

ஆதிதேவன் கொள் போன கங் காளமே யணிந்தநுந் தசை போனகங் காளமே.
பாதிகாத்திரம் வின்னக நாரியே பைம்பொன் மாமலை வின்னக நாரியே.
கோதிலாரண மோதிய கங்கையே கோடீரத்தலை மோதிய கங்கையே.
மாதரார்புர மானவ நீதமே மணந்த விர்த்தது மானவ நீதமே. ௫௧

### மதங்கு - அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நவமணிக ளிலகு மெழி னகிலமிசை வீணையினை நயமுறவணைத் தொளிர்கொடிப்
பவளவிரல்வருடவுளவவயவமெலாமெழுதுபதுமையெனவெண்ணெய் நகர்வாழ்
சிவனதிணை யடியினிசை துதிசெயு மதங்கியொரு திருநடன மதுபுரிவளேல்
நவவிரத வகையறிது நவவிரத பலனினிது நமையடைத லென் கொ றுணிவே.

### நேரிசைவெண்பா.

வேண்டிய வெலாம் பெறலா மெய்விழுமுன் னெஞ்சே
காண்டற் கரிய செழுங் கற்பகமாம்—ஆண்டவனைத்
துங்கபினா கத்தானைத் தூயவெண்ணெ யூருமைபால்
தங்கபினா கத்தானைச் சார். ௫௨

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சாற்று வார் வினை மாற்று வாரெனுந் தன்மை தேர்ந்தன னன்மை யாகமுன்
ஆற்று மாமண மாற்றி நம்பியை யடிமை கொண்டதாற் படியில் யாவரும்
போற்று வெண்டிரு நீற்றுமேனியர் புனிதர் வெண்ணெயி லினி தமர்ந்தவர்
கூற்று கெஞ்சகச் சீற்ற முற்றடி கொண்டுதைத் தருள் பண்டை நாதரே. ௫௩

இவை முப்பத்தைந்தும் வஞ்சி அடிகள்

**வஞ்சிப்பா.**

தரு வளர் பொழில் விரி மலரிழி
பிழிநிறைந் தணை வழிதரும் பணை
முள் ளரை மரைக் கள்ளவிழ் மல
ரிடை யோதி மம் பெடை யோர்ந் திய
திகழ் மென் சிறை யக லாது கண்
டுயி லக் கடை சியர் கண் டுதங்
கண வர்க் கினி துண ரச் சொலு
நய மென் சொலா லய னின் றுள
முளி கோ டரந் தளி ரீன் றிடச
செந் நெல் லருள் பன் னன் மணி
வெள் வளை தரு மொள் ளொளி மணி
யிர விருள் கெட விரி கதிர் தர
மன் னுங் கொழுங் கன் னல் வெடித்
தெழு வான் மணி மழை யீன் றிடக்
கரு முகில் பொழி தரு மணி மலர்
நிலக் கண் பலப் பலப் புண் செய
வா ளைச் செழும் பா ளைத் தாயின்
றடர் பூ மலர்த் தட மே வர
கொடி நாட் டிய கடி மா ளிகைத்
திகழ் பன் மணி பகல் செய் திட
இர வல ருண வரு கென வறை
முர செழு கடற் றிரை யொலி தர
மண வியன் மழைக் கண வொலி தர
மே லோர் பல நூ லாய் வுறத்
தகை வே தியர் மக மே செயும்
புகை விண் ணுறை முகி லென் றுமா
குயில் பா டவண் மயி லா டவொண்
கிளி மென் சொலா ரொளி செய் நிலா
முன் றின் கணே நின் றைந் தரு
மலர் கொய் தொறு மில கும் பணி
சுமை யென் றிட விமை யோ ருல
கென் றும் பக லென் றுரை செய
விளங் கிய பல வளந் தரு திரு

வெண் ணெயம் பதி யண் ணலருட் டுணை
அன் புறப் பணிந் தின் புற நினைந்
துள்ளமே. [இது தனிச்சொல்]
அலை வுற நிற்கினுலகின[இது நேரிசை ஆசிரிய சுரிதகம்]
டோறு முழன் றிடுமிப் பிறவி நோ யறுமே. ௫௫

### மறம் - பதினான்கு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அறவர் சிந்தனைசெய் வெண்ணெ யம்பதி யனாதி மங்கையுமை பாதியான்
அரி மலர்க் கணடி யிசை விளங்கு மிறை யன்பு கொண்டபழ வடிமையா
மறவ ரென் றறிகி லாது பெண்கொளவு மன்ன வன்றிரு முகங்கொடே
வந்த தூ தமுன மரச ரெங்கள் குல மகளிர் மீதுவிழை வுற்றவந்
திற கிழந்த பற வையை நிகர்த்து நக ரிற்புகுந்த முத லித்துணை
யீண் டடைந்ததிலர் திருமுகத்து நிசி யில கிடத் தடவி யின்றுறுந்
திற மறிந்து மினி யவருடன் பொருத றிறம தன்றென விடுத்தனஞ்
செய்தி யெங்கிளைஞ ருணரு முன்விடை தெரித்தி டக் கடிது சென்மினே. ௫௬

### கட்டளைக் கலித்துறை.

செல்லார் பொழில் வெண்ணெய் நல்லூ ருறையுஞ் சிவன் புகழைச்
சொல்லார் பிறவி யென் னீடுமன்பு தொடர்ந் தவுளன்
னில்லா நினைந்து முக நோக்கிக் கண்பனி நீருகுத்துச்
செல்லா நின்றானின் றுறைவான் வருந்தலென் சேயிழையே. ௫௭

### தழை - கட்டளைக்கலித்துறை.

இழையாட் கிடந்தந்த வெண்ணெய் புரேச னெழில் வரையில்
தழையான் மதகரி யெய்தே னென வுரை தந் திவணின்
றழையாத சம்பந்தி போற்றியக் குற்றன ளாறிதி
குழையாவ னெஞ்ச ருயிர் விழி யம்பிற் கொளுமனமே. ௫௮

### பன்னிரு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அன்னமுறங்கும் வயல் வெண்ணெ யமர்ந்த கிருபா புரி நாத
னடியார்க் கெளிய னுயிர்க் குயிரா மண்ணல் பெருமா னனுகா
வன்ன ரூலையீர் நீர் தெளிக்கு மணங்கால் பனிநீர் குளிராது [னேல்
மதவேட் கணையு மோயாது மலயா நிலமுந் தண்ணளியா
தின்னன் மதி தண் கதிர் தூவா திரைக்குங் கடலு மன்றிலுமா
விளங்கோ கிலமும் வாயடங்கா திவ்வூர் றையு மலரொழியாத்
துன்னு மிரவும் விடியாது தூய்த்தண் மலர்ப்பாய் சகியாது [௫௯
தொடிமென் றுகிலு நிலையாது துளிபெய் விழியு முறங்காவே

### பண் - பதினான்கு சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வேலை சூழி மேதி னிக்கண் மேவு வீடு தோறுமே
வீணை கொண்டு பாடி நின்றும் விடர்த மோடு முளரியை
வேலை வென்ற மக ளிரைப் புணர்த்து முள்ள சாலமும்
வீணிலே கழித்த தன்றி மிடிகழித் திலாயிது
வேலை சீசீ பாண கேட்டி வேதன் மாத வன்றொழும்
வெண்ணெ யீச னெய்தி னோர்க்கு வேண்டு செல்வ நல்கியெவ்
வேலை யுங் களிக்கு மின்ப வீடு நல்கு மெம்பிரான்
வீறு பாடி யளவில் செல்வம் விரைவி னெய்தி வாழ்கவே. ௬௰

### வண்டு - கட்டளைக் கலித்துறை.

வாழுங் கதியருள் வெண்ணெய் நல் லூரிறை வன் வரையில்
யாழும் பொருமொழி மெல்லிடை கொங்கை யிருஞ் சுமையால்
வீழும்படி துவள் கின்றன நுங்களை வீண்பழியே.
சூழுஞ் சுழல்விட் டகலுமின் வண்டொரு தும்பிகளே. ௬௧

### கட்டளை மண்டலக்கலிப்பா.

தும்பி மாவுரி யோன் றிரி யம்பகன்
றாயமால் வெள்ளி யங் கிரி யம்பகன்
நம்பன் வெண்ணெய் புரேச்சுர நாட்டிடை
நவிலுவாள் விர கச்சுர நாட்டிடை
கும்பமாலிபக் கோடு பயோதரங்
கூந்தனீள் கடற் கோடு பயோதரம்
அம்புவாள் விழி வாம மரம்பையே
யாய்ந்து நோக்குறின் வாம மரம்பையே. ௬௨

### குறம் - அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அரம் பொருத வேல்விழியா யவனியெலாங் குறம்பாடி யணைந்தே னீண்டுன்
கரந் திகழி ரேகை யுளக் கருத்து மறிந்தியம் புவனோர் கலைநல் காய் பொற்
சரந் திகழுங்கொங்கை முகக்குறி நோக்கின் வெண்ணெய் நல்லூர்தனில் வாழ்
வரந் தருசிரோ மணியை யின்று முனி வரும் வியப்ப மணந்துய்வாயே.[தேனை

### கட்டளைக்கலித்துறை.

மணந் தான் றிரு வெண்ணெய் மாநகரீ சன் வரையினின்னெண்
குணந் தான் றெளிந் திவன் போலே யருகிற் குழைந்து நின்றோர்
கணந் தான் விடை யரு ளென்றிரந் நான் கலவி கற்ப தற்குத்
தணந் தான் மகிழ் பவளார் கேளொழிநந் தனவனமே. ௬௪

இரங்கல்மடக்கு - பன்னிருசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்,

வனவர் ராழி யொளி வளையே
மணிகூ ராழி யொளி வளையே
வளியால் விலகு மணிக் கலமே
மறந்த விலகு மணிக்கலமே

இனனூர் புளின மேசுறவே
இகலன் புளின மேசுறவே
இரங்கு மாவிக் குருகே
இரங் குமாவிக் குருகே

கனபார் காமன் வண்டினமே
கனலே காமன் வண்டினமே
கரைத்துத் தடக்கண் பொருமலையே
கானூர் தடக்கண் பொருமலையே

மினலா லலர் கண் டற் போதே
மிகுந் துன் பலர் கண் டற் போதே
வெண்ணெய் புரியார் மாலையரே
மேவன்புரியார் மாலையரே. ௩௫

நேரிசை வெண்பா.

மாலறியாத தன்மையினான் மாவெணெயும் பேர்பெற்றான்
ஆலமுண்ட வெண்ணெ யருட்டுறையான்—சீலமிகு
தீர்த் தருளு மான் பாகன் றேர்ந்த வடி யார் வினையைத்
தீர்த்தருளு மான்பாகன் சீர். ௩௬

கலி - பதினான்கு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சீருறுந் திருவெண்ணெ யம்பதி தேவதேவ னுமாபதி
செய்ய மாமறை தேடு சேவடி சிந்தைசெய் திடு களியர் யாம்
வாரவைரவ பூசைசெய்து மகிழ்ந்து மாமது வுண்பரேல்
மன்னுமெண்வகை சித்தி கைவச மாகு மாதலின் புத்தர் காள்
தாருறும் புய மன்னர் வேண்டிய தன்மை மிக்கது மௌலியே
தரணி மேலுயர் விண்ணி னுஞ் சுரர் தாம் விருப்புறல் சாறுவே
வாரி சூழுல கந் தனக்கதி வள மளிப்பது மாரியே
மாந்தர் யாவரும் வைகலுங் கொள வாஞ்சை யுற்றது சாலியே. ௩௭

### எண் சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சாலி மணி சொரி வயல் சூழ் வெண்ணெய் நல்லூர்ச்
சம்பு சதா சிவனசலத் தையல்பாகன்
சூலி மணி கண்டனடி யகத் திருத்தித்
துணைமலர்க்கை மேற்குவித்துத் துதித்துப் போற்றி
ஆலி மணி விழியுருத்தைத் தெழித்தை யுன்னு
தரிய சிவகதி பெறுக வாத ரித்துப்
போலி மணி யனைய பிற தெய்வம் பேணாற்
புணரி நீந்திடக் கையிலான் புகுது நெறியே. ௬௮

### மடக்கு - கொச்சகக் கலிப்பா.

ஏடவிழ் பூஞ் சோலை வெண்ணெ யீச்சுரனை நிற்கண்ட
நாடொடங்கி வெள்விடங்கி நாங்கணையா ளுங்கணைய
வாடுகின்றாண் மெல்வனிதை மாதர் முனென் சொல் வனிதை
ஆடரவ மணிபரமே யருள்புரிவ துன்பரமே. ௬௯

### கலித்துறை.

பரவுந் தொழிலும் பசியும் பிணியும் பலவெய்தி
இரவும் பகலுந் துயர்கொண்டுழல் வீ ரிவை தீர்வீர்
சுரரும் புலம்வென் றவருந் தினமுந் தொழுவெண்ணெய்
புரமன்னிய நம் பரமன் சரணம் புகழ்வீரே. ௭௰

### துயில் விடுதூது-அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வீரமழு வாளிநவ நீதபுர நாதனதி வேணியிறை யாதி பகவன்
ஆரமுலை மேவநக மூரலடை யாளமு மளித்தெனை மறந்த தெனமோ
காருலவு சோலையிடை மேவுகுயிலே யெனது காதறனை யோதியிகல் செய்
மாரனுன நாணவெழு வா கிலணி மாலை தனை வாங்கி வரு பாரமுனதே. ௭௧

### கட்டளைக் கலித்துறை.

தேங்கா விடைமுகில் சூழ் வெண்ணெ யீசன் றிகழுமையோர்
பாங்கா விடைவரு வான்வரை யானிரு பாரமுலைத்
தாங்காவிடை நுடங் கக் கொடி போலுந் தழுவியுளந்
தூங்காவிடை தந்த சூழ்ச்சியி னெஞ்சந் துடிக்கின்றதே. ௭௨

### எழுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

நுடி கொண்ட செங்கை யரன் வெண்ணெய் வாசன்
றுகடீர் வரைக் கணலர் பூங்

கடிகொண்ட மேகம் பிறைகூப்ப னீலங்
கவினும்பல் கோவை மதியம்
தொடிகொண்ட வீணை முடிமின்னல் வாழை
சுடர்கின்ற பொற்கொடி யெனுள்
குடிகொண்ட தாங்கே யுறைகின்ற காட்சி
குறியிந்த்ர சால மெனவே. எ௩

காலம் - எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இந்திரவிற் காட்டிபறைத் தாலாலம்போ
லெங்குமிருண் டெப்பணியு மேங்கிவாடச்
சந்தமுறு குயிலொடுங்க மிகவிடித்துத்
தாரைபொழி கார்காலஞ் சார்ந்துந் தோகாய்
நந்துமணி யிலகுவயல் வெண்ணெய் நல்லூர்
நாயகனென் மனங்கவர் மணாளன்சீவர்
தந்தகைமையாவு முணர்ந்தருளுந்தேவன்
றற்பரனெப்பொருட்கு மிறைசார்ந்திலானே. (எச)

பண்-பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

திலகெய்போற் சராசரஞ் செறிந்த வெண்ணெய் நாயகர்
சிட்டியாதி கிர்த்தியஞ்செய் தேவரென்ற தேவர்கட்
பலனயந்தோர் பெண்புணர்த்த பாணவீது மதிகொலோ
பண்ணியைந்த நாயன்மார் பணித்தபாட லன்புடன்
பலவும்யாழி லேற்றிநன்கு பாடுநீல கண்டயாழ்ப்
பாணரீச ரிடமடைந்த பரிசுகேட்டி லாய்கொலோ
சொலியவத் தொழிற்கடத்தி நீயும்யாழின் முக்கணார்த்
துதிசெய்பாட லினிதுபாடி தொலைவில்செல்வ மடைதியால்.

பன்னிரு சீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

மடைவாய்த் தவழுமொண் சங்க
மணியைக் கருவென் றனப்பேடை
வளவெண் சிறகா லடைகாக்கும்
வயல்சூழ் வெண்ணெய் மாபுரனே
சடைமா மகுடப பெருமானே
தண்ணாக கருணை கூர்பரனே

சமயங் கடந்த தனிப்பொருளே
சகல வுயிர்க்கு மொருமுதலே
நடையா சாரங் கடந்துமக
னடத்தி னறிவுவரப் பணித்தி
நல்ல நெறியிற் செலுத்துவது
நல்குந் தந்தைக் கடனன்றோ
கடையேன் செய்த தீவினைக்குக்
காட்டி யதுபோ தும்போதும்
கடுந்துன் பகற்றி யின்பருளிக்
கழற்கா ளிழற்கீழ்ப் பொருத்தாயே. ௬௬

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

தாயளித்தவப்பவர்க்கந் தனைக்குழவி யளிக்கமகிழ்தாயைப்போலும்
நீயளித்த சுருதிமுதற் கலைகளினு னினைப்புகழ நீயுவத்தல் [தீமைக்
தூயவன்ப தன்றிமற்றென் னுளதோவெம் பெருமானே தொழும்பர்
காயவெண்ணெய் நல்லூரில்வீற்றிருக்குந் தனிமுதலேகைலைவாழ்வே.

ஊசல்-எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்,

கயிலைமலை மேருமலை தூண்களாகக்
ககனமுக டேற்றியவுத் திரமதாக
வெயிலுமிழ்சூட் டரவரசன் வடமதாக
விண்மணிபீ டிகையாக வீற்றிருந்தே
மயிலனைய வுமையவளோ டாடிரூசல்
வானவர் பூமழைபொழிய வாடிரூசல்
செயிராறு விஞ்சையர்பாட வாடிரூசல்
திருவெண்ணெய் புரவாச வாடிரூசல். எ௮

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஊசல்வடஞ்சஞ்சலைகண் ணிமையலையூர் சகடமெனவுடல்கடோறும்
ஆசாரவெய் தியுமீண்டு மளவில் பல பொழுதெளியே னலைதனின்றன்
ஏசிலருட்கழகோவென் வினையிருணின்னருளிரவியெழிற்செலாதோ
வாசவனாரணன் பரவும்வெண்ணெய் நல்லூரருட்டுறைவாழ்மழுவலோனே.

### கலித்துறை.

வலமுற்றபயில்காண்மென் மொழியுற்ற கிளிகாளொண்மணிகந்தரன்
நலமுற்ற வுமைபாக னெழில்வெண்ணெயிறைவெற்பினசைநஞ்சுசஞ்
சலமுற்று மணவாள னெனைநாடின் விழிசிந்துசல மேய்ந்துகி
சலமுற்ற வழியேகு மெனுமென்கண் மறவேனுந் தனிநேசமே. ௮௰

### கட்டளைக் கலித்துறை.

நேசத் துணைவனை வெண்ணெய் நல்லூரனை நித்தியனைப்
பாசத் துணையுமெற் சேர்த்திவெ னின்மிகப் பாடுபட்டாய்
வீசத் துணையிதழிற்பற் குறிபட மெய்ந்நலங்க
வர்சத் துணைமுலை யொண்கூ ருகிருற மான்விழியே. ௮௧

### கட்டளைக்கலிப்பா.

மானை யோர்கர மேந்திய நாயகன்
மாட மார்வெண்ணெய் மாநகர் வள்ளல்செவ்
வானை நேர்வடி வன்புய மீதணி
மாலை தந்தனன் மன்மத நீயினி
மீனை வில்வளித் தேர்வடக் கேவிடு
மென்று தின்கழை யுச்சியிற் பூமுடி
தேனை யொத்த மொழிச்சியர்க் கேவல்செய்
செல்கி லாதுன்றன் சேவகத் திண்மையே. ௮௨

### நேரிசை வெண்பா.

திண்ணங் கதிபெறலாந் தேர்கிலையோ நன்னெஞ்சே
விண்ணம் புவிபோற்று வெண்ணெயுறை—யண்ணல்
கருத்தொண் டருவினையைக் காயும்பரமன்
திருத்தொண் டருக்கேவல் செய். ௮௩

### தழை - கட்டளைக்கலித்துறை.

செய்த்தழை யாக்கழை முத்திலும் வெண்ணெய்ச் சிவன்வரையில்
கைத்தழை யான்மத யானையெய்தே னெனுங் காரணத்தான்
பொய்த்தழை யாநின் றனன் மயிலே மதன் பூங்கணையால்
எய்த்தழை யாமுனமித்தழை கிற்கின்ப மீந்தருவே. ௮௪

### மதங்கு - அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ததும்பி மதுவார் மலர்பொழில்சூழ் தருவெண் ணெயில்வாழ் பரன்வரையில்
மதங்கி யிடையை வருத்திமணி வடங்க ளொதுக்கி வார்க்கிழித்துப்
பிதுங்கி யெழுந்த தடமுலைமேற் பிறழ்யா ழிசையும் பார்த்துணரா
தொதுங்கி மறையீர் மறையீரே னுயிரென்படுமோ மறையீரே. அரு

### இளவேனிற்காலம் - வேற்றொலி வெண்டுறை.

ஈரமலர் மணம்பரப்ப விருஞ் சிறைவண் டிசைபாட விளங்கால் வீச
வீரமத னினிதிருந்தே யரசாட்சி செலுத்துமிள வேனிற்காலம்
நேருமுன் னெய்துவ னென நிகழ்த்திய
வாரமார் வெண்ணெயார் வந்திலாரரோ. அசு

### முதுவேனிற்காலம் - கலித்துறை.

வந்தனை கொண்டருள் வெண்ணெ யருட்டுறை மாதேவர்
சந்த முறும்புய மந்தரமூழ்கு தனந்தேமல்
முந்துர வம்பல் விளைந்திட வந்தது முதுவேனில்
இந்தின வொண்ணுத லீரவருக்கி தியப்பீரே. அஎ

### கார்காலம் - அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

இயமனிறங் கவர்ந்து வளி நெட்டுயிர்த்துக் குமுறியிடித் தெழுந்தகோபம்
பயமளிக்குங் கார்கால மெம்மிறைவன் வெண்ணெய்வளம் பதிவாழீசன்
நயனநுத லோன் வரையிற் படராதோ புன்குக நறுமென்பூவே
கயமலரு மம்புயமே யளியினமே யோதிமமே கடிசெய்காவே. அஅ

### இருபனிக்காலம் - எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கடிமலர்ப் பொழிலிடைக் கலவியுற் றிடுமுனங்
கணமுநிற் பிரிவுறக் கனவுமுற் றிடனெனச்
சடிலர்மிக் கருளுடைத் தகையர்வெண் ணெயினுறை
தருநுதற் கண்ணெழிற் சரணமுன் னுகிலர்போல்
படியினிற் பொருள்பெறப் படர்கருத் தினரிலாப்
பருவமென் றுரு சாற் பருவமுட் பகையுறு
இடியொடுற் றது வகன் றிடு முனெற் கருதி நீ
யிடர்செயப் படுதியோ விரும்பனிக் காலமே. அகூ

### கொச்சகக் கலிப்பா.

பனிமலர்ப்பூங் குழனல்லாய் பைங்கழையில் வேட்கணையால்
தனியிருந்து நினைநினைந்து தழன்மெழுகா னினையொன்றே
முனிவர்தொழு திருவெண்ணெய் முதல்வனெம்மை யாளுடையான்
புனிதனதி மதியணிந்த புரிசடிலன் வரப்புகலாய். ௬௰

### வஞ்சித்துறை.

புகழுறு வெண்ணெய்
நகருறை யண்ணல்
திகழ்பத மென்னி
யிகபர நண்ணீர். ௬௧

### வஞ்சி விருத்தம்.

நண்ணுறு வார்வினை நையவே
வெண்ணெய் மாநகர் மேவிய
பண்ண வன்றனை பண்ணலார்
எண்ணின் வேறிலை யீசனே. ௬௨

### கலி விருத்தம்.

ஈசன் வெண்ணெய்மா வாச னெப்பறு
தேச னெம்பிரான் வாச மென்பதம்
நேச மாய்நினைந் தேச மென்கையின்
பாச நம்மிசை வீச லோவுவீர். ௬௩

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வீரமுடை நின்கணையு மீலமல ரம்புவிழி
வென்றதென நின்றெதிர்மிகு
போரது விளைக்கவரு மாரவறி யாயரவ
பூணணிவினை நீறுபுரிவோன்
நீரணி சடாமகுட னரியொரு பாகனவ
நீதபுர நாதனிறைவன்
காரணி மிடற்றனுயர் தேவர்தொழு பாதனதி
காரன்வரு கால மிதுவே. ௬௪

### கலிவிருத்தம்.

காலனை யுதைத்தவன் காமற் காய்ந்தவன்
மேலவர் தொழுதிரு வெண்ணெய் நாயகன்
ஆலமுண் டம்பருக் காவி நல்கினோன்
சாலநன் கருளுவன் றளர னெஞ்சமே. ௬௫

### கட்டளைக் கலித்துறை

நெஞ்சங் கரைந்து நினையாத் தமியனை நின்னிருகாற்
கஞ்சங்கருது மடியார் குழாத்துட் கலத்திடு னென்
அஞ்சங்கமல வலைகட னங்கை யகற் றிலையால்
நஞ்சங்கலந்த மிடற்றோய் திருவெண்ணெய் நாயகனே. ௬௬

### வெறிவிலக்கு - அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

நாயகனை வெண்ணெய்நக ரமர்ந்த சிவ பெருமானை நாரிகொங்கைத்
தோயகனை மதியிதழி தோயமணி வேணியனைத் தொழுதுபஞ்ச
சாயகனையினியொருகால் விழித்தெரிக்கப் புகலாது தளர்ந்துநாளுந்
தாயகனேந்தென்னைவெறி கொண்டதென்று வெறியறுக்குந் தன்மையென்னே.

### நேரிசை வெண்பா.

தன்னே ரிலான் முனமுன் றன்னையுதைத்த பிரான்
மின்னேர் சடாமகுடன் வெண்ணெயிறை — என்னோர்
உயிர்த்துணையு மந்தரங்கத் துள்ளவனுந் தேராய்
செயிர்த்துணையு மந்தகனே செல். ௬௮

### கட்டளைக் கலித்துறை.

செல்லங் கசன்றனை நீறுகண்டோன் வெண்ணெய்த் தேவர்பிரான்
வில்லங் கடுக்கையணிவேணிநாதன் வியன்வரையோய்
நல்லங்க மாறுடை நால்வேதமுங்கற்று நண்ணுவையேல்
வல்லங்கம் பெண்ணுரு வாம் வித்தையுங்கற்றுவந்தருளே. ௬௯

### கலித்துறை.

வந்தித்து நின்றங்க முருகச் சரீரத்து மயிர்குச்சிட
நந்திச் சிருங்கத்தி னிடையாக நோக்கிக்க ணிதி நீர்தரச்
சிந்திக்கும் வானோர்கண் முதலாய யாவர்க்குஞ் சிவமென்னுமோர்
புந்திக் கியைந்தகதி தரும் வெண்ணெய் நகர்நாதர்பொன்னடிகளே.

இவை இரண்டும் தனி பாடல்கள்.

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பணிசுமக்கும் புடவிமுத லுலகனைத்தும் படர்ந்தியங்கும் பலபேதத்துங்
கணிதமிடற் கரியவுயிர் தொறுங்கலந்தா யவையு ளொன்றே கடையன்வெய்யப்
பிணிமயிலே யருந்தவினைக் கடலழுந்திப் படுந்துயரம் பேசலென்னே
அணிதிசமு முமைபாகா வெண்ணெய் நல்லூ ரருட்டுறைவா ழருட்கணனே. ௱க

### [நேரிசை வெண்பா விறுவுத்தரம்.]

மாறிருடி யுண்ட தெவன் மைதுலியை நீக்கியதென்
கூறுமுத லெழுத் தென் கோறுதலோ—வீறணியுந்
தேவெண்ணெய் மா நபல சிவருறை வோன் சேர்வென்
காவெண்ணெய் மாந கரம். ௱உ

திரு வெண்ணெய்க் கலம்பகம்

சம்பூரணம்.

---

VL கூ.13.
(8476)



டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.